


# 2019 ANNUAL REPORT

Sammanthurai Pradeshiya Sabha
Ampara Road, Sammanthurai

சம்மாந்துறை பிரதேச சபை

සම්මාන්තුරෙයි ප්‍රාදේශීය සභාව

SAMMANTHURAI PRADESHIYA SABHA

## உள்ளே


| உள்ளே | பக்கம் |
|---|---|
| 01. சம்மாந்துறை பிரதேச சபை இலட்சினை | 01 |
| 02. 2.1. Vision 2.2. Mission 2.3.Objective | 02-03 |
| 03. சம்மாந்துறை பிரதேசத்தின் வரைபடம் | 04 |
| 04. கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் தொடர்பான விபரம் | 05-07 |
| 05. சம்மாந்துறை பிரதேச சபை அறிமுகம் | 08-11 |
| 05.1.பொதுவான தகவல்கள் | 12-14 |
| 06. அடிப்படை வளங்கள் தொடர்பான விபரங்கள் | |
| 6.1. பிரதேச சபை அலுவலகம் | 15 |
| 6.2. அப்துல் மஜீட் பொது கூட்ட மண்டபம் | 16 |
| 6.3. பொது சந்தை | 17 |
| 6.4. சிறுவர் பூங்கா | 18-19 |
| 6.5. பொது விளையாட்டு மைதானங்கள் | 20-21 |
| 6.6. வாகனங்கள் | 22-23 |
| 6.7. பொது நூலகங்கள் | 23-I |
| 6.8. ஜனாதிபதி விளையாட்டு கட்டடத் தொகுதி | 23I-24 |
| 6.9. திண்மக் கழிவு முகாமை நிலையம் | 25 |
| 6.10. விலங்கு கொல் களம் | 26 |
| 6.11. அப்துல் மஜீட் ஞாபகார்த்த ஜனாஸா மண்டபம் | 27 |
| 6.12. முன்பள்ளிப் பாலர் பாடசாலைகள் | 27 |
| 07. Organization Chart | 28 |
| 08. Cadre Position | 29-32 |
| 09. Staff Details | 33-35 |
| 9.1. இடமாற்றம் பெற்றோர் மற்றும் இடமாற்றம் பெற்று வந்தவர்கள் விபரம் | 36 |
| 9.2. ஓய்வு பெற்றுச் சென்றோர் விபரம் | 36 |
| 10. அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் தொடர்பான விபரங்கள் | 37-41 |
| 11. நிதி முகாமை | |
| 11.1. வரவு செலவுத் திட்டம் - 2019 பொழிப்பு | 42 |
| 11.2. மொத்த வருமானப் பொழிப்பு -2019 | 43 |
| 11.3. மொத்த செலவினப் பொழிப்பு -2019 | 44 |
| 11.4. Budget Vs. Archival – 2019 | 45-50 |
| 11.5. பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனங்களும், வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் தொடர்பான விபரங்களும். | 51 |
| 11.6. ஆதனவரி மற்றும், அறவீடு செய்யப்பட்ட ஆதனவரி தொடர்பான விபரங்களும். | 52 |
| 11.7. வருமான நிலுவைகள் தொடர்பான விபரங்கள் -2019 | 53 |
| 11.8. கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான விபரங்கள்- 2019 | 54 |
| 12. அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் | 55-58 |
| 13. சம்மாந்துறை பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்டு தற்போது இயங்கிவரும் சனசமூக நிலையங்கள் தொடர்பான விபரங்கள் | 59 |
| 14. பிரதேச சபையினால் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் /விஸேட செயற்பாடுகள். | 60-84 |
| 15. எதிர் நோக்கும் சவால்கள் | 85 |
| 16. மதிப்பீடும் , முடிவுரையும் | 86 |

## தூரநோக்கு දැක්ම Vision

சம்மாந்துறையில் ஓர் நிலையான, பசுமை செழித்தோங்கும்,
பகிர்வு நோக்குடைய சமூகத்தை உருவாக்குதல்

සම්මාන්තුරේ හිදි ස්ථිර, සරුසාරවත්, බෙදා දීම
අරමුණ කරගත් සමාජයක් පිහිටුවීම

**"Sammanthurai a Green Stable Thriving Community with a Shared Purpose"**

## எமது பணிகள் මෙහෙයුම Mission

பல் சமூகத்தைக் கொண்ட மார்க்கரீதியான பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஸ்தீரத்தன்மையா்ன சனசமூக நிலையங்களை உருவாக்கி, மக்கள் பங்குபற்றுதலை ஊக்குவித்து, .சூழலை பாதுகாத்தலுடன் அபிவிருத்தித் தேவைகளை இனங்காணுதல்

බහු සමාජයකින් යුත් ආගමික නියෝජිතයන් ඇතුළුවූ සවිමත්
සමාජ මධ්‍යස්ථාන පිහිටුවා, ජනතා සහභාගිත්වය පොළඹවා,
පරිසරය ආරක්‍ෂා කරන අතර සංවර්ධන අවශ්‍යතාවයන් හඳුනා ගැනීම

**Establish Strong Community centers inclusive of representatives of religious bodies, to protect environment and encourage participation in identifying of Development needs of the people**

## 2.3. Objective

* மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டத்தினூடாக மக்களால் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளில் 35 வீதத்தினை நிறைவேற்றல்.

* சிறந்த திண்மக் கழிவகற்றல் சேவையின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் தூய்மையான சூழலுக்கு வழிவகுத்தல்.

* கல்வி, சமூக, பொருளாதாரத் துறைகளின் முன்னேற்றத்திற்கு பக்கபலமாகச் செயற்படல்

* சமூக கலாசார நடவடிக்கையை மேம்படுத்துவதற்கு சனசமூக நிலையங்களை உருவாக்கி, கட்டிட வசதிகளை வழங்குதல்.

* சுகாதார வசதிகளை 80 வீதமாக மேம்படுத்துவதனூடாக அனைத்து தொற்று நோய் கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாயிருத்தல்.


* சகல சமுகங்களினதும் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தல்.

* புதிய வருமான மூலங்களை அடையாளம் கண்டு 75 வீத வருமான அதிகரிப்பை ஏற்படுத்தி, அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

* வாசிப்பின் மூலமாக வளமான எதிர்காலத்திற்கு வழிவகுத்தல்

# District : Ampara
# DS Division : Sammanthurai

## Administrative map






Produced through the generous support of:
Canada
DFID
World Vision


Produced By:
Humanitarian Information Center,Sri Lanka

# 202-204, Bauddhaloka Mawatha, Colombo 7, Tel: +94 (11) 2504433 - 5, Fax: +94 (11) 4528690, Email: hicsrilanka@gmail.com- Online: Http://www.humanitarianinfo.org/srilanka

## 04. Particulers of Members. Sammanthurai Pradeshiya Sabha-2019


| S/No | Name of the Member | Party | Designation | Personal Address | Mobil No |
|---|---|---|---|---|---|
| 01 | Mr.AM.Mohammed Naoshaad | ACMC | Hon.Chairman | 333, Ismail Lodge, MP Road, Sammanthurai -09 | 0777895695 |
| 02 | Mr.V.Jeyachandran | SLFP | Hon.V.Chairman | 231/2,New Village, Walathappiddy -01 | 0774948319 |
| 03 | Mr.IL. Najeem | UNP | Hon.Member | 25/B, Hijra 6th Lane, Sammanthurai | 0776159805 |
| 04 | Mr.SMM. Musthapha | UNP | Hon.Member | 64/1, Hospital Road, Sammanthurai | 0773748740 |
| 05 | Mr.A. Achchi Mohamed | SLFP | Hon.Member | 356, Pilawadi lane, sammanthurai -07 | 0777112961 |
| 06 | Mr.UL. Asfar | ACMC | Hon.Member | 308, Block j East -02, Sammanthurai | 0772391985 |
| 07 | Mrs.R. Valarmathy | SLFP | Hon.Member | 49/B, New Town, Malwathai -02. | 0766830727 |
| 08 | Mr.N. Govindasamy | ACMC | Hon.Member | 275/A, Old Co - op Lane, Veeramunai -02, | 0774166616 |
| 09 | Mr.ACM.Saheel | ACMC | Hon.Member | 99/C, Amparai 14th Road, Udanga-02,Sammanthurai | 0767676929 |
| 10 | Mr.MT. Fouzullah | ACMC | Hon.Member | 337,MP Road,Loadmen Lane, Sammanthuai-09 | 0779186632 |
| 11 | Mr.ILM. Mahir | UNP | Hon.Member | 88, Mal 2nd Road, Sammanthurai | 0777272998 |
| 12 | Mr.AMM. Riyaz | ACMC | Hon.Member | 104, Pilavadi Lane, Sammanthurai -04 | 0777607266 |
| 13 | Mr.ALM. Jifri | ACMC | Hon.Member | 76, Al Arsath Road, Malayadi -03, Sammanthurai | 0779353663 |
| 14 | Mr.S. Naleem | UNP | Hon.Member | 129/1, Malkampiddy Road, Sammanthurai | 0774720620 |
| 15 | Mr.A. Yoosuf Lebbe | UNP | Hon.Member | 353A, Hijra 1st Road, Sammanthurai | 0774898485 |
| 16 | Mrs.KMR. Inpawathy | UNP | Hon.Member | 171A,Tambinayagepuram, Malwaththai - 01 | 0775933390 |
| 17 | Mrs.MS. Sareefa | UNP | Hon.Member | 280, Vise vaithiyer Illam,Malayadi-03, Sammanthurai | 0771757005 |
| 18 | Mrs.SM. Sithiy Nilavfa | UNP | Hon.Member | 88, Kalmunai Road, Sammanthurai | 0779645768 |
| 19 | Mrs.KL. Shihama | ACMC | Hon.Member | 321,1st Crose Street, Sammanthurai | 0776034497 |
| 20 | Mr.YBM. Muzammil | SLFP | Hon.Member | 37/A, Hijira Road, Sammanthurai | 0772260926 |

04.1. **Our Hon. Chairman**



Hon.A.M.Mohammed Naoshaad, Chairman

04.2. கௌரவ தவிசாளர், கௌரவ உப தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள்



**1வது வரிசை இடமிருந்து**

கௌரவ AMM.றியாஸ்(உறுப்பினர்), கௌரவ N.கோவிந்தசாமி(உறுப்பினர்), கௌரவ ACM.சஹீல்(உறுப்பினர்),
கௌரவ ILM.மாஹீர்(உறுப்பினர்), கௌரவ AM.முஹம்மத் நௌஸாட்(தவிசாளர்), கௌரவ V.ஜெயச்சந்திரன்(உப தவிசாளர்), கௌரவ SMM.முஸ்தபா(உறுப்பினர்), கௌரவ MT.பௌசுள்ளாஹ்(உறுப்பினர்), கௌரவ ALM.ஜிப்றி(உறுப்பினர்), கௌரவ YBM.முஸம்மில்(உறுப்பினர்), கௌரவ IL.நஜீம்(உறுப்பினர்),

**2வது வரிசை இடமிருந்து**

கௌரவ A..அச்சி முஹம்மட்(உறுப்பினர்), கௌரவ KMR.இன்பவதி(உறுப்பினர்), கௌரவ SM.சித்தி நிலுபா(உறுப்பினர்), கௌரவ MS.சரீபா(உறுப்பினர்), கௌரவ R.வளர்மதி(உறுப்பினர்), கௌரவ KL.சிஹாமா(உறுப்பினர்), கௌரவ A.யூசுப்லெப்வை(உறுப்பினர்), கௌரவ S.நளீம்(உறுப்பினர்), கௌரவ UL.அஸ்பர்(உறுப்பினர்),

## 05. சம்மாந்துறை பிரதேச சபை அறிமுகம்

### சம்மாந்துறை உள்ளூராட்சி வரலாறு

இலங்கை வரலாற்றில் உள்ளூர் நிருவாகங்கள், மன்னர்களாலும் ஐரோப்பியர்களாலும் பற்பல நிருவாக அலகுகளால் பரிபாலிக்கப்பட்டுள்ளமையை அறிவோம். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், 1915ஆம் ஆண்டளவில்தான் "வன்னியா நிருவாகம்" என்ற அமைப்பு முறையொன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பு பரந்த பிரதேசத்தை உள்ளடக்கியதாக இருந்தபடியால், கட்டுப்படுத்தப்பட்ட ஒரு எல்லையை மையமாகக் கொண்ட உள்ளூராட்சி (LOCAL BOARD) அமைப்பு முறையொன்று ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க அதிபர் (GA) காரியாலயம் (கச்சேரி) மட்டக்களப்பில் இயங்கியபடியால் மக்களின் அன்றாட பணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக 1925ஆம் ஆண்டளவில் "சுகாதார சபைகள்" (SANITARY BOARD) தேசாதிபதியால் நியமிக்கப்பட்டது. இச்பைகள் மக்களால் தெரிவு செய்யப்படாமல் உள்ளூர் பிரமுகர்களைக் கொண்டதாக தேசாதிபதியால் தெரிவு செய்யப்பட்டனர். வன்னியார், சமயதலங்களின் சிபாரிசுகளுக்கமைய இத்தெரிவு நடைபெற்றுள்ளது. ஆரம்பத்தில் இச்சுகாதார சபை மூன்று பேர்களைக் கொண்டதாக இருந்துள்ளது. இச்சபை தெருக்களையும், பாதைகளையும் துப்பரவாக வைத்திருத்தல், சிறு பாலங்கள் அமைத்தல், இரவு காலங்களில் தெருவிளக்குகளை ஏற்றி மக்களின் நடமாட்டத்துக்காக உதவி புரிதல், நுளம்புத் தொல்லைகளிலிருந்து மக்களை காப்பாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரங்கள் இச்சுகாதார சபைக்கு வழங்கப்பட்டிருந்தன.

1931ஆம் ஆண்டின் பிரிட்டிஷ்சாரின் "டொனமூர்" சட்ட சீர்திருத்தங்களின் மூலம் இச்சபைகளுக்கு அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டதுடன் இச்சபையின் அங்கத்தவர் தொகையும் ஐந்தாக உயர்த்தப்பட்டன. இச்சபைகளின் நடவடிக்கைகளுக்காக தேவையான நிதியை மட்டக்களப்பு கச்சேரியினால் ஒதுக்கப்பட்டதாகவும் அறிகின்றோம். எனவே, சுகாதார சபைகள் மக்களிடமிருந்து எந்த விதமான வரிகளையும் அறவிடாமல், அரசாங்கத்தின் நிதி மூலமே மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இச்சபையில் முகம்மது உடையார் முகைதீன்பாவா போடி, கலந்தர்லெவ்வை முகம்மதலியார் போடி, அபீப் முகம்மதுப் போடி (ஐப்போடி), உதுமாலெவ்வைப்போடி, கோஸ்முகம்மதுப்போடி போன்றவர்கள் கடமையாற்றியதாகவும் அறிகின்றோம்.

### பட்டின சபை

1947ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் யாப்பில் சீர்திருத்தப்படி இலங்கையின் சுதந்திரத்திற்கு வழிவகுத்தது. அதன் பிரகாரம் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. அத்துடன் உள்ளூராட்சி சபைகளும் அமைக்கப்பட்டன. சம்மாந்துறை, கல்முனைத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளான கிராம சபை, பட்டின சபை, நகரசபை, மாநகர சபை என்று நிர்ணயிக்கப்பட்டன. அந்த வகையில் கல்முனை, சம்மாந்துறை மாத்திரம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள (இன்றைய அம்பாரை மாவட்டத்திலுள்ள) பட்டின சபைகளாக இயங்கின.

1947ஆம் ஆண்டின் நடைபெற்ற சம்மாந்துறை பட்டின சபைக்கான தேர்தல் ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பட்டின சபையின் முதல் தலைவராக ஜனாப் யூ.எம். சுலைமாலெவ்வையும், திரு. நு.பொன்னையா உப-தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் உறுப்பினர்களாக ஜனாப். எம்.பி. முகம்மது இஸ்மாயில் (லோட்மேன்) ஜனாப். பக்கீர் முகையதீன் போடியார், ஜனாப். எம்.ஏ. அப்துல் காதர் (சந்தனம் வ.வி) தெரிவாகினர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பட்டின சபையாகத் தெரிவு செய்யப்பட்டதும் சோலைவரி

அறவிடவும், சந்தையைக் குத்தகைக்கு விடவும் அதிகாரம் கொண்ட சபையாக விளங்கியமையால் அதன் மூலம் கிடைக்கும் வருமானங்களும், அரசாங்க மானியங்களும் சபையை நடாத்திச் செல்ல உதவியதென்றால் மிகையாகாது.

1950ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டின சபைத் தேர்தலில் ஜனாப். எம்.யூ. உதுமாலெவ்வை முன்னாள் காழியார் தலைவரானார். பட்டின சபைக்கு சொந்தக் காரியாலயம் இல்லாதபடியால் இவ்விருவர் கலங்களிலும் வெவ்வேறு இடங்களில் தனியார் இல்லங்களில் இக்காரியாலயம் நடைபெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. முக்குவர் வட்டையில் இருந்த தோம்புதோர் வளவிலும், அதனைத் தொடர்ந்து தம்பிநாதப்பிள்ளை உடையார் வளவிலும், இதனைத் தொடர்ந்து சுபைர் காரியப்பர் கிட்டங்கிலும் கடைசியாக நீதிமன்றத்திற்கு முன்பாகவுள்ள அப்துல் மஜீத் அமைச்சர் வளவிலுமாக பட்டின சபை நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன.

அப்போதய பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப். ஏ.எம். மேர்சா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக 1954.08.28ஆம் திகதியில் ஏ.எம். மேர்சா அவர்களால் பட்டின சபையின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அப்போது பட்டின சபையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள்:-

1. ஜனாப் எம்.ஐ. அப்துல் லத்தீப் (தலைவர்)
2. ஜனாப் ஏ. ஆதம்லெவ்வை (உபதலைவர்-எஸ்.ஆர்)
3. ஜனாப் எம்.ஏ. அப்துல் காதர் சந்தனம் (வ.வி)
4. ஜனாப் எஸ். ஆதம்பாவா நூலச்சியர் பரிகாரி
5. திரு. கே. மாணிக்கம்
6. திரு. ரீ. சபாநாயகம்

புதிய பட்டின சபைக் காரியாலயம் இயங்கத் தெதடங்கியபோது அதன் செயலாளராக திரு. கே. கணபதிப்பிள்ளை அவர்கள் கடமையாற்றினார்கள். இக்கட்டத்தின் ஒப்பந்தக்காரராக ஏ.எச். அச்சி முகம்மது (அச்சிப் போடியார்) அவர்கள் இருந்து மிகச் சிறந்த முறையில் பட்டின சபைக் காரியாலயத்தை கட்டிக் கொடுத்த வகையால் பலரதும் பாராட்டைப் பெற்றிருந்தார்.

இவர்களைத் தொடர்ந்து எம்.ஏ. அப்துல் மஜீத் (முன்னாள் அமைச்சர்) எம்.ஏ. அமீர் அலி, எம். இஸட். கமால் காரியப்பர், யூ.எல்.எம். முகைதீன் (சட்டத்தரணி), ஐ.எம். இப்றாஹீம், எம்.ஐ.எம். மன்சூர் ஆகியோர் தலைவராகக் கடமையாற்றியுள்ளனர். அதன் பின்னர் தற்போது ஏ.எம்.எம் நௌஷாட் அவர்கள் தவிசாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

அப்போதய பட்டின சபையின் கிழக்கு எல்லையாக நெல்லுப்புடி ஆறும், மேற்கு எல்லையாக வீரமுனையும், தெற்கு அலிவன்னனியர் வீதியும், வடக்கு அலவக்கரையும் உள்ளடக்கிய பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தன. பட்டின சபை பிரதேச சபையாக மாற்றமடைந்த வரலாற்றை கிராம சபைத் தலைப்பில் பார்போம்.

## கிராம சபை

சோல்பரி அரசியல் யாப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் ஒன்றான கிராம சபையின் தோற்றம் சம்மாந்துறையில் எவ்வாறு அமையப்பெற்றது என்பதைப் பார்போம். கல்ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறையின் கருவாட்டுக்கல், ஜே புளக் போன்ற பிரதேசங்கள் அபிவிருத்தி அடையத் தொடங்கின. இதனால் இப்பகுதிகள் ஆற்றுப்பள்ளத்தாக்கு சபையின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்தன. மக்கள் பிரதி நிதிகள் இச்சபையில் இடம் பெறவில்லை. 1965ஆம் ஆண்டுக்குப் பிறகு சம்மாந்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு (தற்போதய DS பிரிவு) இறக்காமம் கிராம சபை, நாவிதன்வெளி கிராம சபை இச்சபையில் கருவாட்டுக்கல், ஜே புளக் பகுதி, மல்வத்தை அமைந்திருந்தன.

1968ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைகளின் மீள் எல்லைப் பிரிவுகளின் பிரகாரம் நாவிதன்வெளி, மல்வத்தை, சம்மாந்துறை என மூன்று கிராம சபைகளாக அமையப் பெற்றன. இதன் மூலம் சம்மாந்துறை ஒரு பட்டின சபையாகவும், ஒரு கிராம சபையகவும், செயற்படத் தொடங்கின. சம்மாந்துறை கிராம சபையில் கருவாட்டுக்கல் பிரதேசம், "ஜே" புளக் கிழக்கு, மேற்கு, மலையடிக்கிராமம், கல்லரச்சல், செந்நெல் கிராமம் என்பன அடங்கலாயின.

## பிரதேச சபைகள்

1988.10.01ஆம் திகதி முதல் பிரதேச சபைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனால் உள்ளூராட்சி நிருவாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படலாயின. பட்டின சபை முறை முற்றாக நீக்கப்பட்டு, கிராம சபையும் நீக்கப்பட்டு, பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என மூன்று பிரிவுகளாக்கப்பட்டன. சம்மாந்துறை பட்டின சபை நகர நகர சபையாக உயர்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பட்டின சபை அந்தஸ்து குறைக்கப்பட்டு பிரதேச சபையாக இயங்கத் தொடங்கியது. இவ் ஒவ்வொரு பிரதேச செயலகமும் ஒரு பிரதேச சபை என்ற திட்டத்தால் சம்மாந்துறை பட்டின சபை, நாவிதன்வெளிக் கிராம சபை, மல்வெத்தைக் கிராம சபை, இறக்காமம் கிராம சபை, சம்மாந்துறை கிராம சபை ஆகிய ஐந்து தனித்தனி உள்ளூராட்சி சபைகளும் இணைந்ததான "சம்மாந்துறை பிரதேச சபையாக" நடைபெறலாயிற்று. சம்மாந்துறை பட்டின சபைக் காரியாலயம் பிரதேச சபைக் காரியாலமாக இயங்கத் தொடங்கியது. ஏனைய நான்கு கிராம சபைக் காரியாலயங்களும் உப பிரதேசக் காரியாலயங்களாகப் செயற்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக 1977ஆம் ஆண்டு தொடக்கம் 1994 வரை வடகிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறவில்லை. தேர்தல்கள் அறிவிக்கப்பட்டும் வேட்பு மனுக்கள் சமர்பிக்கப்பட்டும் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றும் இறுதிக்கட்டத்தில் பலமுறை தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. கடைசியாக 1994.03.01இல் சம்மாந்துறைக்கான பிரதேச சபைத் தேர்தல் நடைபெற்று சட்டத்தரணி யூ.எல்.எம். முகைடீன் அவர்கள் தவிசாளராகவும், அல்ஹாஜ் ஐ.எம். இப்றாஹீம் அவர்கள் உப தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். சட்டத்தரணி யூ.எல்.எம். முகைடீன் அவர்கள் MP ஆக தெரிவு செய்யப்பட்டதும் ஐ.எம். இப்றாஹீம் அவர்கள் தவிசாளராக கடமையாற்றினார். இக்காலத்தில் பற்பல அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றன. முக்கியமாக குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டமை முக்கியமானதாகும்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் ஜனாப் எம்.ஐ.எம். மன்சூர் அவர்கள் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் 2011.03.17ஆம் திகதி நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் தற்போதய தவிசாளர் அல்ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் தெரிவாகி,இற்றைவரை அவர்கள் தவிசாளராக கடமையாற்றி வருகின்றார். இவரது காலத்தில் ஊழல் மோசடிகளற்ற சிறந்த நிருவாக முறைமையை ஏற்படுத்தியுள்ளார். மேலும் பல பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இறக்காமம், நாவிதன்வெளி என்பன தனித்தனி பிரதேச செயலகங்களாக செயற்படுவதால், சம்மாந்துறையின் பிரதேச சபையின் எல்லைக்குள் சுருங்கி விட்டது எனலாம்.

## புதிய பிரதேச சபைக் கட்டடம்

1954ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த பட்டின சபைக் கட்டடம் பின்பு பிரதேச சபைக் கட்டடமாக இயங்கி வந்தது. சுமார் 60 வருடங்கள் பழமை வாய்ந்த இக்கட்டடம் இன்றைய நவீன வசதி கொண்ட நிருவாக அமைப்புக்கு அமைந்ததாக இல்லாத காரணதால் புதிய கட்டடத்தின் தேவை உணரப்பட்டது. இன்றைய தவிசாளர் அல்ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் அவர்களின் அயராத முயற்சியினாலும் பிரதேச சபையின் தீர்மானங்களினாலும் புதிய பிரதேச

சபைக்கான கட்டடம் அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. முன்னைய கட்டடம் ஊரின் ஒதுக்குப் புறம்பான இடத்தில் இருப்பதால் இன்றைய ஊரின் நகர்வுக்கேற்ப ஹிஜ்றா சந்தியில் உள்ள பழைய கிராம சபைக் கட்டிட வளவு தெரிவு செய்யப்பட்டது. இவ்விடம் ஊரின் மத்தியில் உள்ளதால் பொருத்தமானதாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தின் 'புறநெகும' திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2013.04.12ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டடத்தின் அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதம அதிதியாக கௌரவ உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அதாவுல்லா (பா.உ) அவர்கள் கலந்து சிறப்பித்தார். அத்துடன் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் (கி.மா.உ) அவர்களும் எம்.எல்.ஏ. அமீர் TA கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அவர்களும் அம்பாறை மாவட்ட அப்போதய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜனாப் ஏ.ஜே. முஹம்மது இர்ஷாட் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

2017ல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 20 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யட்டனர் .அதில் மீண்டும் தவிசாளராக அல்ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு, இன்றுவரை சிறப்பான முறையில் சம்மாந்துறை பிரதேச சபை நிர்வாகம் இயங்கி வருகின்றது.(நன்றி : "உள்ளூராட்சியும், மக்களும்" சம்மாந்துறை பிரதேசசபை வெளியீடு)

இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், மீன் பிடி, வியாபாரம், அரச தனியார் தொழில்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றை குறிப்பிட்டுக் கூறலாம். முஸ்லீம்கள் 88 வீதமும், தமிழர் 11 வீதமும் , ஏனையோர் 01 வீதமும் வாழும் இப்பிரதேசம் இன ஐக்கியத்துடன் வாழும் மக்களைக் கொண்டமைந்தது.

சபையின் பிரதான வருமானமாக மத்திய , மாகாண அரசாங்கங்களால் வழங்கப்படும் மாணியங்கள், ஆதனவரி, வியாபார உத்தரவுப்பத்திர வரி, முத்திரை வரி, நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் வாடகைக்கு விடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கடந்த 27.03.2018 ஆந் திகதியிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் மூலம் புதிதான பிரதேச சபை சிறப்பாக இயங்கி வருகின்றது. ஆலோசனை சபை, அபிவிருத்திக் குழுக்கள், சனசமூக நிலையங்கள் , மாகாண சபை உறுப்பினர், பிரதேச பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, RDA, RDD என்பவர்களுடன் இணைத்து தமது செயற்பாடுகளை மேற்கொண்டது.

ஏ.எம்.முஹம்மது நௌசாட்
தவிசாளர்,
சம்மாந்துறை பிரதேச சபை.

## 05.1.சம்மாந்துறை பிரதேச சபையின் பொதுவான தகவல்கள்

ஆரம்ப விபரம்

1.1 மாகாணம் : கிழக்கு

1.2 மாவட்டம் : அம்பாரை

1.3 தேர்தல் மாவட்டம் / தொகுதி : திகாமடுல்ல / சம்மாந்துறை

1.4 பிரதேச செயலாளர் பிரிவு : சம்மாந்துறை

1.5 உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயரும் விலாசமும் : சம்மாந்துறை பிரதேச சபை

1.6 தற்போதைய சபை உருவமைத்த திகதி : 2018.03.27

1.7 தற்போதைய சபை உறுப்பினர் என்னிக்கை : 20

1.8 ஆரம்ப உள்ளூராட்சி நிறுவனம் : பட்டினசபை -1947 இல்

1.9 நிர்வாக பிரதேசத்தின் பிரதான நகரம் : சம்மாந்துறை

1.10 உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதான காரியாலயத்திலிருந்து

பிரதான நகரத்திற்கு இடையிலான தூரம் : 0.5 (கி.மீ.)

1.11 தொலைபேசி இலக்கம் / இலக்கங்கள் :

I. கௌரவ தவிசாளர் : 0672260178

II. பொது அலுவலகம் : 0672260043

1.12 தொலைநகல் இலக்கம் : 0672260235

1.13 மின்னஞ்சல் முகவரி : strps2009@yahoo.com

1.14 இணைய முகவரி : www. sammanthurailg.com

1.15 சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட

உப காரியாலயங்களின் எண்ணிக்கை : 01

1.15 உப காரியாலயம் பற்றிய விபரம் :

| தொடர் இல | உப அலுவலகத்தின் பெயர், முகவரி | பிரதான அலுவலகத்திற்கு உள்ள தூரம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| i. | மல்வத்தை உப அலுவலகம், மல்வத்தை | 10 Km | 067 3696967 |

2.0 உள்ளூராட்சி நிறுவனத்தின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பௌதிக விபரங்கள்

2.1 நிர்வாகப் பிரிவின் பரப்பளவு (வ.கி.மீ) : 136 SqKm

2.2 நிர்வாகப் பிரதேசத்திற்குரிய கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை : 51

2.2.1 கிராமங்களின் எண்ணிக்கை : 30

2.3 கடல் மட்டத்திலிருந்து உயரம் (மீட்டர்): ஆகக்கூடிய உயரம் (மீட்டர்):27M

ஆகக்குறைந்த உயரம் (மீட்டர்) : 09M

2.4 இடத்தின் தன்மை: சமதரை, மலைப்பிரதேசம்

2.5 குறுக்குக்கோடு அமைவிடம் : 7" 20"

2.6 நெடுங்கோடு அமைவிடம் : 81" 45"

2.7 அதிகாரப் பிரதேசம் கொண்டமைந்த
(குளிர் பிரதேசம்/ வரண்ட பிரதேசம்/ இடைப்பட்ட பிரதேசம்) : இடைப்பட்ட பிரதேசம்

2.8 வருடாந்த பொதுவான மழைவீழ்ச்சி (மி.மீ) : 1500MM – 1750MM

2.9 வருடத்தின் பொதுவான வெப்பம் (பரனைட் இலக்கம்) : 80.60 - 86F

03. பொது விபரங்கள் :

01. சனத் தொகை : 70419
02. குடும்பங்கள் : 17992
03. ஊழியர்களின் எண்ணிக்கை (அலுவலகம்) : நிரந்தரம் - 96 பதில் - 60
04. சபையினால் நிர்வாகிக்கப்படும் உப நிறுவனங்கள் : 30
05. சபைக்குரிய வாகனங்களின் எண்ணிக்கை : 33
06. ஏனையவை


I. ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள வீதிகளின் எண்ணிக்கை : 44.964 கி.மீ
a. கிறவல் நீளம் : 50.961 கி.மீ
b. கொன்கிறிட் : 39.221 கி.மீ
c. மணல் வீதி நீளம் : 4.394 கி.மீ
d. கல்லுபரவுதல் வீதி : 10.111 கி.மீ
e. தார் வீதி


| | | |
|---|---|---|
| II. | வடிகான்களின் நீளம் | : 779 கி.மீ |
| III. | கற்பினித் தாய்மார், குழந்தை சிகிச்சை நிலையம் | : 06 |
| IV. | சனசமுக நிலையங்களின் எண்ணிக்கை | : 18 |
| V. | ஆரம்ப பாடசாலைகளின் எண்ணிக்கை | : 80 |
| VI. | சபையினால் நிர்வகிக்கப்படும் ஆரம்ப பாடசாலைகள் | : 04 |
| VII. | பாடசாலைகளின் எண்ணிக்கை | : 37 |
| VIII. | பொது நூலகங்கள் | : 04 |
| IX. | நூல்கள் வாசிக்கும் நிலையங்கள் | : 05 |
| X. | அறிவகம் | : 03 |
| XI. | பொது விளையாட்டு மைதானம் | : 05 |
| XII. | பொதுச் சந்தைகள் | : 03 |
| XIII. | வாராந்த சந்தை | : 01 |
| XIV. | மயாண பூமிகள் | : 15 |
| XV. | சிறுவர் பூங்கா | : 05 |
| XVI. | சேதனப் பசளை தயாரிக்கும் நிலையம் | : 01 |
| XVII. | எலும்பு அரைக்கும் ஆலை | : 01 (பயன்பாட்டில் இல்லை) |
| XVIII. | பொதுக் கிணறு | : 16 |
| XIX. | வியாபார வரி தொடர்பான நிலையங்கள் | : 1100 |
| XX. | பஸ்தரிப்பு நிலையம் | : 01 |
| XXI. | கிராம சேவகர் பிரிவு | : 51 |
| XXII. | நகர மண்டபங்கள்/கூட்டம் கூடும் நோக்கத்திற்கான மண்டபம் | : 02 |
| XXIII. | வாடகைக்குக் கொடுக்கப்படும் சந்தைகள் கடைகள் | : 116 |
| XXIV. | தெரு விளக்கு | : 3920 - 4000 |
| XXV. | நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுகளின் அளவு | : 28 தொன் - 32 தொன் |

## 6. <u>அடிப்படை வளங்கள் தொடர்பான விபரங்கள்</u>

### 6.1. பிரதேச சபையின் பிரதான அலுவலகம்.

முன்பு பட்டிணசபைக் கட்டிடமாக 1954 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிய, சுமார் 60 வருடங்கள் பழமைவாய்ந்த கட்டிடத்தில் பிரதேச சபை இயங்கி வந்தது. இதனைக்கருத்திற் கொண்ட தற்போதய கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் ஏ.எம்.நௌசாட் அவர்களின் அயராத முயற்சி காரணமாக "புறநெகும" செயற்திட்டத்தில் எமதூரின் மத்தியில் ஹிஜ்றா சந்தியில் சுமார் 40 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2013.04.12 இல் அடிக்கல் நடப்பட்டு, 02 மாடி கட்டடங்களுடன் 2014.12.29 ஆந் திகதி சகல வசதிகளுடன் பிரதான அலுவல்கம் ஆரம்பிக்கப்பட்டது.





6.2. **அப்துல் மஜீட் பொது மண்டபம்**

சுமார் 1000 பேர் ஒன்று கூடக் கூடிய மண்டபமாக நவீனமயப்படுத்தப்பட்ட மண்டபம் தற்போது புதிதாக வர்ணம் பூசப்பட்டுள்ளதுடன்,முற்புறத்தில் பூங்கா உன்றும் அமைக்கப்பட்டு செயற்படுகின்றது.அத்துடன் நவீன தொழிநுட்ப வசதி கொண்ட மேடை, ஒலிபெருக்கி, Multi Media Projector வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

இங்கு பிரதான விழாக்கள், திருமண நிகழ்வுகள், வைபவங்கள் என்பன சிறப்பாக நடாத்தப்படுகின்றது.



6.3. **பொதுச்சந்தை**

01. நவீன மயப்படுத்தப்பட்டதான பொதுச் சந்தை நகரின் மத்தியில் "ஹிஜ்றா பொதுச் சந்தையாக இயங்கி வருகின்றது. இதில் 91 நிரந்தர கடைகளும்,35 தற்காலிக கடைகளும், 03 இறைச்சிக் கடைகளும் இயங்கி வருகின்றது.



02. பழைய ஆலையடிச் சந்தை

இச்சந்தை தற்போது புனரமைக்கப்பட்டு 09 கடையறைகளுடன் இயங்கி வருகின்றது.



6.4. <u>**சிறுவர் பூங்காக்கள்**</u>

சம்மாந்துறை பிரதேச சபையானது அமீரலி சிறுவர் பூங்கா, கல்லறிச்சல் சிறுவர் பூங்கா. கைகாட்டி சிறுவர் பூங்கா, வளத்தாப்பிட்டி சிறுவர் பூங்கா, மல்வத்தை சிறுவர் பூங்கா, இஸ்மாயீல் புர சிறுவர் பூங்கா என்பவற்றை பல நவீன விளையாட்டு உபகரணங்களுடன் சிறுவர்களின் பொழுது போக்கினை கழிப்பதற்தாக நடாத்தி வருகின்றது.

1. **அமீரலி சிறுவர் பூங்கா**



2. **கல்லறிச்சல் சிறுவர் பூங்கா.**

